செ.வெ.எண்55 நாள்.20.10.2017.

**திருநெல்வேலி, சங்கர் நகர் பேரூராட்சி பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் துப்புரவு பணிகள் டெங்கு கொசு ஒழிப்பு மற்றும் விழிப்புணர்வு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் இன்று அதிகாலையில் நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.**

---

திருநெல்வேலி, சங்கர் நகர் பேரூராட்சி பகுதியில் துப்புரவு பணிகள் டெங்கு கொசு ஒழிப்பு மற்றும் விழிப்புணர்வு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் இன்று (20.10.2017) அதிகாலையில் நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

சங்கர் நகர் பேரூராட்சி பகுதியில் நடைபெற்று வரும் மெகா துப்புரவு பணிகள் டெங்கு கொசு ஒழிப்பு மற்றும் விழிப்புணர்வு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டார். தொடர்ந்து, வீடு, வீடாக சென்று குடிநீர் தொட்டிகள், டிரம்கள் உள்ளிட்டவைகள் சுத்தமாக பராமரிக்கப்பட்டுகிறதா என ஆய்வு செய்தார். டெங்கு கொசு ஒழிப்பு பணியாளர்களிடம் கொசு ஒழிப்பு பணிகளை தீவிரமாக பணியாற்ற வேண்டுமென உத்தரவிட்டார். மேலும், புதிதாக கட்டப்பட்டு வரும் கட்டடங்களில் கொசு புழு உற்பதியாகிறதா என்பதையும், கொசு ஒழிப்பு புகை மருந்து அடிப்பதையும் ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ந்து சங்கர் நகர் ஜெயந்திரா சரஸ்வதி கோல்டன் ஜூப்லி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் டெங்கு கொசு ஒழிப்பு பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஆய்வு செய்தார். பள்ளியின் பல்வேறு பகுதிகளில் நல்ல நீரில் கொசு புழுக்கள் உள்ளதை கண்டறிந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சுகாதார மற்றும் கொசு ஒழிப்பு பணிகளில் மெத்தனமாக இருந்த பள்ளிக்கு ரூ.20,000 அபாராதமும், சுகாதாரத் துறையின் மூலம் விளக்கம் கோட்டு நோட்டீஸ் அனுப்பவும் பேரூராட்சி மற்றும் சுகாதாரத்துறை அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

ஆய்வின் போது, சுகாதாரப் பணிகள் துணை இயக்குநர் மரு.சோமசுந்தரம், பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் திரு.மாஹின் அபுபக்கர், வட்டாட்சியர் திரு.கணேசன், சங்கர் நகர் பேரூராட்சி செயல் அலுவலர் திரு.வெங்கடேஷ், வட்டார மருத்துவ அலுவலர் திரு.ஜஸ்டின், மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.